விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 4 | ஐ. அவ் 6 | இதழ் 341
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 17-1-1986

## பார்சல் குண்டு வெடித்து இருவர் காயம்!

[கொழும்பு]
பொரளைச் சந்தியில் நேற்றுக்காலை பார்சல் குண்டு வெடித்ததில் இருவர் காயமடைந்தனர்.

வர்த்தக நிறுவனமொன்றின் முன்பக்க கண்ணாடிகளும், சில வாகனங்களின முன்பக்கக் கண்ணாடிகளும் சேதமடைந்தன.

குறிப்பிட்ட வர்த்தக நிறுவனததின் முன்பாக, வீதியில் ஒரு பார்சல் கிடந்ததாகவும், அதனை ஒருவர் தடியொன்றினால் அகற்ற முற்பட்டபோதே அது வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொரளைப் பொலிஸார் ஸ்தலத்துக்கு வரமுன்னர் இச்சம்பவம் நிகழ்ந்தது.

## இருமுகாம்கள் முற்றுகை: ஏழு பேர் கைது

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு ம வட்டத்திலுள்ள இ ண்டு இடங்களில் தீவிரவாதிகளின் மறைவிடங்களை பந்தோபஸ்துப்படையி

(5-ம் பக்கம் பார்க்க)



யாழ். நகரில் நேற்றுக்காலை நிகழ்ந்த சூட்டுச்சம்பவத்தில் பலியானவர்கள். (1) காத்தான்குடியைச் சேர்ந்த அப்துல் ஹமீட் (2) வண்ணார்பண்ணையைச் சேர்ந்த ஜோசப் பக்கிரிநாதர் (3) மருதனாமடையைச் சேர்ந்த காமில் அருஸ்.

● (யாழ். குடாநாட்டில்) ஆயிரம் மீற்றர் எல்லைக்குள் உள்ள பிரதேசம்

# இராணுவ முகாம்களைச் சுற்றி பாதுகாப்பு வலயப் பிரகடனம்!

## பெரிய ஆயுதங்களை பயன்படுத்த படையினருக்கு அதிகாரம்

(கொழும்பு)
யாழ்ப்பாணம் குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களைச்சுற்றி பாதுகாப்பு வலயங்கள் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிற்கும், ஏனைய இராணுவ முகாம்களுக்கும் இது பொருந்தும். முகாமில் இருந்து ஆயிரம் மீற்றர் எல்லைக்குள் உள்ள பிரதேசம் பாதுகாப்பு வலயமாக இருக்குமென்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## அரியாலைச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நோக்கி கண்டி வீதி வழியாக நிறைந்த பிரயாணிகளுடன் வந்து கொண்டிருந்த இ. போ. ச. வரத்துச்சபை பஸ்ஸை நாவற்குழி முகாமருகே நிறுத்தி அதில் ஏறி வந்த இராணுவத்தினர் அரியாலைச் சந்திக்குச் சிறிது யார் தூரத்தில் பஸ்ஸை நிறுத்தி பஸ்ஸினுள் இருந்தவாறு அரியாலைச் சந்தியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், இதனால் அவ்விடத்தில் நின்றவர்கள் வயல்களினூடாகவும், வேலிகளினூடாகவும் பாய்ந்து ஓடியதாகவும் தெரிகிறது.

நேற்று நண்பகல் 12-30 மணியளவில் அரியாலையில் இச்சம்பவம் நடைபெற்றது.

துப்பாக்கி வெடிச்சத்தங்களைத் தொடர்ந்துஅவ்விடத்தை நோக்கி ஓடி வந்த இளைஞர்கள் கைக்குண்டுகளை வீசியதா

[6-ம் பக்கம் பார்க்க]

யாழ். நகரில் மீண்டும் ஏற்பட்ட பதற்றம்!

## துப்பாக்கிச்சூடு, குண்டுத் தாக்குதலில் மூவர்பலி! 19பேர் படுகாயம்!!

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரில் நேற்றுக்காலை நடந்த தாக்குதலிலும், குண்டு வெடிப்புச் சம்பவத்திலும் இரு முஸ்லிம் இளைஞர்கள் உட்பட மூவர் பலியானார்கள்.ஒருசிங்களத் தொழிலாளி மற்றும் ஒரு முஸ்லிம் வியாபாரி உட்பட 19பேர் காயமடைந்தார்கள். சிலவீடுகள் கடைகள் பலத்த சேதமடைந்துள்ளன.

கோட்டையிலிருந்து நேற்றுக்காலை சுமார் ஆறரைமணியளவில் ஆயுதப்படையினர் வாகனம் ஒன்றிலும், நடந்தும் யாழ். நகரை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, தீவிரவாதிகள் அதனை எதிர்த்து குண்டுகளை வீசி துப்பாக்கியால் சுட்டார்கள்.

சுமார் இரண்டுமணி நேரம் யாழ். நகரம் அல்லோலகல்லோலப்பட்டது. எங்கும் குண்டுவெடிச்சத்தங்களும் துப்பாக்கி வெடிச்சத்தங்களும் கேட்டன

### குண்டு வெடித்தது

யாழ். நகர் நடைபாதை முஸ்லிம் வியாபாரிகள் புல்லுகுத்தி தோட்டத்தில் மின்சார நிலைய வீதியிலுள்ள சிறு ஒழுங்கையில் வீடொன்றின்முன் விறுந்தையில் கதைத்துக் கொண்டிருந்தபோது, கோட்டைப்பகுதியிலிருந்து வந்த குண்டொன்று முற்றத்தில் விழுந்து வெடித்துச்சிதறிய

[5-ம் பக்கம் பார்க்க]

LANKA CEMENT LIMITED
Kankesanturai

கற்குழியில் இருந்து கல்நொருக்கி இயந்திரத்திற்கு சுண்ணும்புக்கல் ஏற்றி இறக்குதல்.

கீரிமலைக்கு அருகாமையில் அமைந்துள்ள எமது கற்குழியில் இருந்து (Quarry) தொழிற்சாலையிலுள்ள எமது கல்நொருக்கி இயந்திரத்திற்கு (Crusher) சுண்ணும்புக்கற்களை ஏற்றி இறக்குவதற்காக ரிப்பர், லொறிகள் (Tipper, Lorris) டம்பர்கள் (Dumpers) தேவைப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு ரிப்பர், லொறிகள், டம்பர்கள் என்பனவற்றை சேவையில் ஈடுபடுத்த விரும்பும் வாகனச்சொந்தக்காரர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்கள் எமது தொழிற்சாலை முகாமையாளரை அவரது காரியாலயத்தில் சந்தித்து வாகனங்களைப் பரிசோதனைக்குட்படுத்தி (Inspection of vehicle) சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகளைச்செய்யும்படி தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

(A 63)

# வரிவிளம்பரம்

## சேவை

T. V. றேடியோ, மோட்டர், பான், வீட்டு வயறிங் மற்றும் சகல மின்பாவனைகளும் திருத்திக் கொடுக்கப்படும். பாலன் எலற்றிக்கல், 18, இருபாலை றோட், கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில். [C 210]

கொழும்புக்கு வருபவர்களுக்கு ஓர் நற்செய்தி. மீண்டும் உணவுடன் தங்குமிட வசதிகள் சகாய கட்டணத்தில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். வாக் இன் (Walkinn), 41/1, W. A Silva-Mawatha, வெள்ளவத்தை. [C 194)

## விற்பனைக்கு

சாவகச்சேரியில் புகையிரத நிலையம், பஸ் நிலையம், பாடசாலை, தபாற்கந்தோர் ஆகியவற்றிற்கு கிட்டவாக நல்ல சுற்றுடலில் அமைந்த நல்ல தண்ணீர் உள்ள 3 பரப்பில் அமைந்த புதியவீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 74, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலுக்கு அருகில்) [C 212]

ஆரம்ப விஞ்ஞானம்-ஆண்டு 4-13/- ஆண்டு 5-16/- ஆக்கம் பிரான்சிஸ் ஞானப்பொன்ருஜ். பதிப்பாளர்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C-112]

Nel Farm பிறவுண் சேவற்குஞ்சு 21-ந் திகதி 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். C 54

## மணப்பந்தல்

26 வயதும் 5' 1'' உயரமுடைய டாக்டர் (Dr.) M .B. B. S. இற்கு 25 வயதுக்குட்பட்ட கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த படித்த ஆங்கில அறிவுடைய நல்லொழுக்கமுள்ள அழகிய பெண்தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும்: விளம்பர இலக்கம்: C 222, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 222]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## இளைஞர் சடலம்

[ஒட்டுசுட்டான்]

கற்சிலைமடுவைச் சேர்ந்த செல்லத்தம்பி சுபேந்திரன் [27 வயது] என்பவரின் சடலம் முத்துஐயன்கட்டு பிரதான வாய்க்கால் ஓரத்தில் கண்டு பிடிக்கப்பட்டது.

இவர் ஆறு மாதங்களுக்கு முன்னர் ஒட்டுசுட்டான்-முலைத்தீவு வீதியில் மோட்டார் சைக்கிளில் செல்லும்பொழுது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், சிறு காயங்களுடன் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. [மா]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

ஏழாலை மேற்கினைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகன் சிவஞானத்தின் மரணசாதனமில்லாத சொத்துக்கள் தொடர்பான விடயத்தில்,

மரணமெய்தியவர்

வழ. இல: தத்துவம்/257

முருகன் சிவஞானம் கைம்பெண் நாகேஸ்வரி, ஏழாலை மேற்கு, ஏழாலை

மனுதார்

எதிராக

1. சிவஞானம் மகள் யோகேஸ்வரி - பராயமற்றவர்.
2. கதிரன் சின்னையா இருவரும் ஏழாலை மேற்கு, ஏழாலை.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இறந்தவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு தை மாதம் 22-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படலாகாது எனக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

இன்றுமுத்திரையிடப்பட்டது.

என்னுல் வரையப்பட்டது.
க. அரியநாயகம்
மனுதாரின் சட்டத்தரணி.
[C 232]

## ஓர் உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம் இலங்கை வங்கியிலிருந்து இளைப்பாறிய வட்டுக்கோட்டை கிழக்கு திரு. மருதமுத்து மகேசனை 09-01-86 அதிகாலை 5-45 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் ஒரு மோட்டார் வாகனத்தில் கடத்திச் சென்றனர்.

இவர் இருதயநோய், வாதநோய், மூலநோயினுலும் பீடிக்கப்பட்டு இளைப்பாறி தனது இல்லத்திலே தனது கருமங்களையே பார்க்கமுடியாத தேகநிலையிலுள்ளவர். இந்த உண்மையான நிலையை உணர்ந்து கருணை கூர்ந்து மனிதாபிமானத்துடன் இவரை இவரது இல்லத்தில் எதுவித நிபந்தனையும் இன்றிக் கொண்டு வந்து விடுமாறு வேண்டுகிறேம்.

நாங்கள் எல்லோரும் இவரதுவிடுதலைக்குக்கடவுளை வேண்டிப் பிரார்த்திக்கிறேம்.

மனைவி, மக்கள், சுற்றத்தார்,
வட்டுக்கோட்டை.
C 233 சித்தங்கேணி மக்கள்.

## நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம்

[யாழ்ப்பாணம்]

செல்லிப்பழை வடமேற்கு பாதுகாப்புச் சங்கம் அண்மையில் புனரமைக்கப்பட்டது.

திரு. கே. மதிவதனன் உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர் இச்சங்கத்தின் கடமைகளைப் பற்றியும், அதன் நன்மைகளைப் பற்றியும் விபரமாக எடுத்துக் கூறினுர்.

அதன்பின் நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. தலைவர்: செ.குமாரசுவாமி, உப தலைவர்: இ. நாகேந்திரம், செயலாளர்: அ. ம யோசேப்பு. உப செயலாளர்: இ. துரைரத்தினம், பொருளாளர்: சி. குமாரலிங்கம். பத்துப் பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரியப்பட்டது.

## இன்றைய பலன்

மாதம்- தை
திகதி 4 (17 - 1 - 1986)
கிழமை- வெள்ளி
திதி- ஸப்தமி
பி. ப. வரை
நக்ஷத்திரம்- ரேவதி
முன் இரவு வரை

மேடம்: மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். அன்புச் சகோதரத்தின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

இடபம்: கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. காதலர் எண்ணங்கள் கைகூடும். இன பந்துக்களின் வரவில் மகிழ்ச்சியுண்டு.

மிதுனம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும். சகோதர வழியாலும் சஞ்சலத்துக்கு இடமுண்டு. இன பந்துக்களின் தொல்லையும் அதிகரிக்கும்.

கடகம்: நீண்ட பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். தாய்வழி மூலம் பொருள் வரவிற்கு இடம் உண்டு. வாகன கொள்முதல் செய்வோருக்குச் சிறப்பான தினம்.

சிங்கம்: பூமியால் லாபமுண்டு. புத்திரர் புகழும் சேரும். பொதுசனத் தலைமைக்கான வாய்ப்புக்கிடைக்கும் உடல் நலமும் பாதிக்கப்படும்.

கன்னி: பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும். முடங்கிய வேதனம் கவலையைத் தரலாம். செலவினங்களை கட்டுப்படுத்தவும்.

துலாம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றி உண்டு. தொழில் விடயத்தில் முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்: அதிக அலைச்சல் உங்களுக்கு எரிச்சலைத்தரலாம் தொழில் வருமானம் மிகவும் மட்டமாகவே இருக்கும். நண்பர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்க வேண்டாம்.

தனுசு: பிதா வழியால் பெருமைக்கு இடம் உண்டு. மனம்போல் வாழ்வு இன்று மலரும். சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிட்டும்.

மகரம்: செய் தொழில் மூலம் சிறப்புக்கள் கிடைக்கும் பெரியவர்கள் ஆசி அவசியம் உண்டு. போட்டா போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும்.

கும்பம்; அதிர்ஷ்ட லாபங்களுக்கான அறிகுறிகள் தென்படும். புதுத்தொழில் மூலம் சிறப்புண்டு. மூத்த சகோதர சுகமும் உண்டு.

மீனம்: உறவு முறையில் பிளவு தோன்றக்கூடும். பண விடயங்கள் பகையை உருவாக்கும். தொழிற்துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

# ஐயப்பனின் மகரவிளக்கு

சுருவில் பதியில் எழுந்தருளியிருக்கும் பூர்ணு புஷ்கல சமேத ஹரிஹர புத்திர ஐயனுருக்கு இவ்வாரம் மகரவிளக்குப்பூசை சிறப்பாக நடைபெறுகிறது.

ஐயனுர் சிவனுக்கும் மோகினி வடிவங்கொண்ட விஷ்ணுவுக்கும் திருக்குமாரராக, இருவரது அம்சமாக அவதரித்தபடியால் ஹரிஹர புத்திரர் எனப்பட்டார்.

ஐயனுரின் அவதாரமே மணிகண்டன்- ஐயப்பன் என்று கூறப்படுகின்றது. முருகப்பெருமானுக்கு ஆறுபடை வீடுகள் அமைந்திருப்பது போல ஐயப்பசுவாமிகளுக்கும் றுபடைவீடுகள் அமைந்திருக்கின்றன. ஐயப்பன் குளத்துப்புழாவில் பாலகனுகவும், எருமேலியில் வேடனுகவும், ஆரியங்காவில் கிரகத்தனுகவும், அச்சன்கோயிலில் வானப்பிரத்தனுகவும், சபரிமலையில் சன்னியாசியாகவும், காந்தமலையில் சீவன்முத்தனுகவும் எழுந்தருளியிருக்கின்ருர்.

ஐயனுர் என்னும் திருமூர்த்தம் அரிகரபுத்திரன், சாஸ்தா, சாத்தன், மாசாத்தன், வெள்ளைவாரணன், சடல்நிறவண்ணன், கோடிக்கொடியான் முதலிய பல திருப்பெயர்களால் வழங்கப்படுகின்றது. ஐயன்வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் அருட்கடவுள். குதிரைமேல் ஆரோகணித்து வரும் சாஸ்தா தன் அடியவர்களுகு சத்துருநாசம் செய்பவராக விளங்குகின்ருர்; வீணை, புத்தகம் ஜெபமாலை சிவன் முத்திரை முதலியவற்றுடன் விளங்கும் சாஸ்தாவை வழிபடுபவர்களுக்கு வாக்குச் சித்தி கிட்டும்; யானை மீது ஆரோகணித்து, கரும்புவில் மலரம்பு அபயம் என்பனவற்றுடன் காட்சியளிக்கும் சாஸ்தாவை வணங்குவோர்க்கு மூன்று உலகங்களும் வசமாகும். பூரணைபுட்கலையாகிய தேவியருடன் விளங்கும் சாஸ்தாவை வழிபட்டு வந்தால் காரியங்களனைத்தும் வெற்றியாகும் என்ற நம்பிக்கை பன்றுதொட்டு விளங்குகிறது. ஐயனுரின் ஆருட் கடாட்சம் பெற்ற பக்தர்கள் எந்த ஆபத்தினின்றும் காப்பாற்றப்படுவார்கள் என்ற நம்பிக்கையும் வேரூன்றியுள்ளது.

சுருவில் பதியில் அமைந்திருக்கும் ஐயனுர் ஆலயம் 250 வருடங்களுக்குமேல் பழமை வாய்ந்தது. அன்று சிதம்பரநாதர் இராமலிங்கம் என்ற சைவப் பெரியாரால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆலயம் இன்று புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

சுருவில் மக்கள் ஐயனுரைக் குலதெய்வமாக கொண்டவர்கள். அங்கு ஐயன் காவல் தெய்வமாக அருள் பாலிக்கின்ருர். சோ. நடராசக்குருக்களும் அவரது குமாரரும், அண்மையில் குருப்பட்டாபிஷேகம் செய்யப்பெற்றவருமான, ந. யோகானந்தக்குருக்களும்நியமநைமித்தியங்கள் தவருது ஐயனின் பூஜா காரியங்களைக் கவனித்துவருகின்றனர்.

நாற்பத்தொரு நாள் விரதமிருந்து சபரிமலைசெல்லும் பக்தர்கள் மார்கழிக் கடைசி நாளன்று மகரவிளக்குப் பெருநாளைக் காணுது வருவதில்லை. சுருவில் ஐயனுர் கோவிலிலும் வருடாவருடம் அதேதினத்தில் மகரவிளக்குப் பூசை மிக விமரிசையாக நடைபெறுகிறது. அன்று ஐயன் பூரண புட்கலையுடன் வெள்ளை யானைமீது ஆரோகணித்து கையில் செண்டுடன் பக்தர்களுக்குக் காட்சியளிப்பார் சரணம் ஐயப்பா என்று மனதார வணங்கும் அடியார்க்கு ஜோதி வடிவினனுகக் காட்சியளிக்கின்ருர்.

**இர. சந்திரசேகரன்**

## காயமடைந்தவர்கள் தெரிவித்த விபரம்

(கா. யோகநாதன்)

வசாவிளான் பகுதிகளில் நேற்றுக்காலை நடந்த தரைத் தாக்குதலில் பதினெருபேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில், நால்வர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர். ஏனையோர் மந்திகை ஆஸ்பத்திரிக்கும் தனியார் சிகிச்சை நிலையங்களுக்கும் கொண்டுசெல்லப்பட்டனர்.

ஏழாலையைச் சேர்ந்த த. இராசமணி (69 வயது) வசாவிளானைச் சேர்ந்த அ. போல்ராஜ் (19 வயது), வி. கணேசலிங்கம் (23 வயது) நாராயணன் (18வயது) ஆகியோரே யாழ். ஆஸ்பததிரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ஆஸ்பத்திரி25ம்வாட்டில் அனுமதிக்கப்பட்ட மூவரும், மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டனர். போல்ராஜூக்கு வயிற்றிலும், கணேசலிங்கத்திற்கு நெஞ்சிலும், ராசமணிக்கு இடுப்பிலும் நாராயணனுக்கு வயிற்றிலும் காயங்கள் காணப்பட்டன நால்வரும் உடன் சத்திரசிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

காயமடைந்த போல்ராஜின் சிறியதந்தையான ஆசீர்வாதம்; தோலகட்டிப்பகுதியில் சீருடையினர் வருவதாகவும், மக்கள் சிதறி ஓடியதாகவும், அப்போது காயமடைந்த தமது மகன் என்ன நடக்கிறதென்றுபார்க்கச்சென்றபோது சூடுபட்டதாகவும் கூறினுர்.

காயமடைந்தவரும், தாயாரும்சம்பவம் நடந்தபோது தங்கள்வீட்டிலிருந்ததாகவும் கூறினுர்.

காயமடைந்தமகனை யாழ்ப்பாணம் கொண்டுசெல்ல வாகனங்கள் கிடைக்கவில்லை என்றும், பின் வான் ஒன்றில் அச்சுவேலிக்கு கொண்டு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவந்ததாகவும் அவர் கூறினுர்.

சைக்கிளில் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது, மயிலங்காட்டைச் சேர்ந்த த. கணேசலிங்கத்திற்கு (28 வயது) நெஞ்சில் துப்பாக்கி சூட்டுக்காயம் ஏற்பட்டது.

இவருக்கு அவசர சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

வசாவிளானைச் சேர்ந்த சி. நாராயணனுக்கு (20 வயது) வயிற்றில் சூட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது.

## மணவாளக் கோலம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த மணவாளக் கோல உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ. க. இ. ஜெகநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

விநாயகப்பெருமானுக்கு அஷ்ஷோத்திர சங்காபிஷேகமும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறுவதோடு சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகளை ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர். [ச]

## மணிவாக்கு

"அடிமை விலங்குடன் உயர் கல்வியை நாடிப் போவதைவிட கல்வியறிவின்றி விடுதலைக்காகக் கல்லுடைப்பது மேல்" — காந்திஜி

# நமது நோக்கு

## இனமும் பிரதேசமும்

ஒரு சமூகத்தை அல்லது ஒரு இனத்தை இனங்காணுவதாயின், அவர்களின் - மொழி, கலை கலாசாரம், அவர்கள் வாழும் பிரதேசம் - இவை மூன்றுமே முக்கியத்துவம் பெறும் அம்சங்கள்.

மொழியும், கலை கலாசாரமும் என்னதான் மேம்பட்டிருந்தபோதும் வாழும் பிரதேசம் இல்லாதுபோகுமாயின் அந்தஇனம் அழிந்துபோகத் தலைப்பட்டுவிட்டது என்பதையே சுட்டுவதாய் இருக்கும்.

இன்று உலகின் பல பகுதிகளிலும் பல்கலைக்கழகங்களிலும், உயர் கல்வித் துறைகளிலும் ஆராய்ச்சிகளுக்குப் பயன்படும் லத்தீன், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் ஒருகாலத்தில் மிக உன்னதமான நிலையில் வாழ்ந்த ஒரு பெருமைமிக்க நாகரீகத்தைச் சார்ந்தவையே. ஆனல் அந்த நாகரிகத்துக்குரிய மக்கள் கால ஓட்டத்தில் வலிமைபெற்ற இனங்களுடன் பலவாறும் கலந்து சிதைந்துபோனமையாலும் அவர்களுக்கேஉரிய பிரதேசங்களை இழந்துவிட்டமையாலும் எங்கே,எவர் என்றுஇனங்காணமுடியாது போய்விட்டனர்.

ஆக, அவர்கள் பேசிய மொழி மட்டுமே இன்று உலகில் ஏதோ ஒருவகையில் நிலைத்து நிற்கின்றன. அவர்கள் விட்டுச்சென்ற நாகரிகச்சுவடுகள் ஆங்காங்கே அகழ்வாராய்ச்சிகளில் கிடைக்கின்றன.

இன்று இலங்கையில் என்ன நடக்கின்றது?

தமிழருக்கென ஒரு பிரதேசம் இல்லை. அவர்கள் நாடு முழுவதிலும் பரந்துவாழ உரிமை படைத்தவர்கள் என்று கூறப்படுவதெல்லாம் தமிழர்கள் தமது தனித்துவத்தைச் சிறிது சிறிதாக இழந்து தேசியப் பேரினத்துடன் காலப்போக்கில் ஒன்றாகக் கலந்துவிடச்செய்யும் சூழ்ச்சியே!

இந்த அடிப்படையிலேயே தமிழர் தமது பிரதேசம் என்று பெருமையுடன் பேசிக் கொள்ளும் பகுதிகளில் பேரின மக்களின் திட்டமிட்ட குடியேற்றங்கள் புகுத்தப்படுகின்றன. ஆனல் அயர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் தமிழர்களுக்கென திட்ட மிட்ட குடியேற்றங்கள் எதுவும் செயற் படுத்தப்படுவதில்லை.

நாம் இவ்வாறு எழுதும் பொழுது இதனை இனவாதம் என எவரும் கருத நியாயமில்லை.

இந்த நாட்டில் வாழும் இனங்கள் பலவும் தத்தமக்குரிய பிரதேசங்களில் தமது தனித்துவத்தைப் பேணிக் கொண்டு ஏனைய பிரதேச மக்களுடன் மனிதாபிமான உறவுகளோடு வாழவழியிருக்க வேண்டும். ஒரு இனத்தின்வளர்ச்சிக்கு மற்றஇனம் உதவ வேண்டுமேயன்றி ஒன்றை ஒன்று அழித்தொழிப்பது நோக்கமாக இருக்கலாகாது என்பதே எமதுஎண்ணம்.

எனவே பாரம்பரியமாக நமது முன்னேர்களால் பேணப்பட்டும் பாதுகாத்து வரப்பெற்றதுமானபிரதேசங்களைப் பாதுகாப்பது மட்டுமின்றி அப்பகுதிகளில் காணபபடும் நமது கலை கலாசார மரபுகளையும் சின்னங்களையும்பேணுவதும் இன்றைய தலைமுறையினரின் கடமையாகியுள்ளது.

போர் என்றும், பயங்கரவாதம் என்றும் மார்க்ஸிஸம் என்றும் பேசிக் கொண்டு இப்பிரதேசங்களில் உள்ள பாரம்பரிய கலைசாரச் சின்னங்களை அழிப்பதற்கு எடுக்கப்படும் அராஜகச் செயல்கள் கண்டனத்திற்குரியவை.

## மலையகத்தாரின் பிரஜாவுரிமை

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இலங்கை பிரஜாவுரிமை பெறுமலிருந்த 94,000 பேருக்கும் பிரஜாவுரிமை வழங்குவதற்கு இலங்கை அரசுமுன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இதற்கான சட்டவாக்கம் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருப்பதாகத் தெரிகிறது. இச்சட்டவாக்கம் நிறைவேறிய பின்னரே மேற்படி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய பிரஜாவுரிமைக்குரியவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இ.தொ.கா வின் தலைவர் திரு. எஸ். தொண்டமான் என்ன நோக்கத்திற்காக இன்றைய அரசுடன் இணைந்தாரோ அந்த நோக்கத்தின் ஒரு முக்கிய பகுதி இதன் மூலமே நிறைவேற்றப்படுகின்றது எனக்கொள்ளலாம்.

இந்த நாட்டின் ஏனைய மக்களுடன் சரிநிகராக மலையக மக்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான இன்னும்பல அம்சங்களை அவர்கள் வென்றெடுத்தாக வேண்டும்.

வெறும் வாக்குறுதிகளைத் தொடர்ந்தும் நம்பியிராமல் ஆக்பூர்வமான காரியங்களில் மலையக மக்கள் துணிச்சலுடன் செயல்படுவதற்கு இந்த வெற்றி வழிவகுக்கவேண்டும்.

### சேவைக்காலப் பயிற்சி

(உடுவில்)

மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளின் விஞ்ஞான, கணித, சமூகக் கல்வி பாட ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிவகுப்பு இம்மாதம் 18ம் திகதி காலை சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டு சேவைககாலப் பயிற்சி வகுப்புகள் ஒன்றவிட்ட ஒரு சனிக்கிழமைகளில் நடைபெறவுள்ளதாக விஞ்ஞான, கணித வட்டார அதிகாரி திரு. எஸ். நடராசா தெரிவித்துள்ளார்.

## இன்று எம். ஜி. ஆரின் 69-வது பிறந்ததினம்

## அவரது ஆற்றலும் ஆளுமையும்

# நாம் முழுமையான தீர்வு பெற உதவவேண்டும்!



புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு இன்று அறுபத்தொன்பதாவது பிறந்த நாளாகும்.

1917ம் ஆண்டு தைமாதம் 17ம் திகதி கேரளத்தைச் சேர்ந்த கோபாலனுக்கும் சத்தியபாமாவுக்கும் மகனுக இலங்கையிலுள்ள கண்டியில் பிறந்த இவர் தனது உறுதியான உழைப்பாலும் திடமான திறமையாலும் முன்னணிக்கு வந்த பெருமைக்குரியவர்.

"தேசியவாதி நாட்டுக்குத் தான் சேவைசெய்யவேண்டுமென்று கருதுவான். அரசியல்வாதி நாடு தனக்குச் சேவை செய்யவேண்டுமென்று விரும்புவான்" என்று சொன்னர் ஜோர்ஜஸ் பொம்பிடெய் என்ற அறிஞர். அவருடைய கூற்றுக்கே இலக்கணம் பொறித்தமைபோன்று தன் அரசியல் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட தேசியவாதி எம்,ஜி. ஆர். அவர்கள். தனக்கென்று எதையுமே வைத்திருக்காது நாட்டுக்கும் மக்களுக்கும் வாரி வழங்கிய அவரின் வாழ்வு மக்கள் நலனை மையமாக வைத்தே நடைபெற்று வருகிறது.

மக்களின் வீடுகளுக்கு ஒன்றுக்கு நான்கு தரம் சென்று வாக்குக்கேட்டே பதவிகளை வெற்றிகொள்ளமுடியாதுதிண்டாடுகின்றவேட்பாளர் பலரை நாம் கண்டிருக்கிறேம். ஆனல் எம். ஜி ஆர். அவர்களோ 1967ம் ஆண்டும் 1985ம் ஆண்டும் ஆஸ்பத்திரிக் கட்டில்களில் ஆழ்ந்துறங்கியவண்ணமே ஆட்சிமன்ற உறுப்பினராகவும் அரசாளும் தலைவனுகவும் உருவாக்கப்பட்ட வரலாறு புரட்சித் தலைவருக்கேயுரிய புதுமைமிக்க சரித்திரமாகும்.

தாயின் பெருமையை உணர்ந்த தலைவர் இவர். தமிழ்த்தென்றல் வி. க.சொன்னர். "உலகெலாம் உதிப்பிடந் தாய்மை. உதித்து தங்கி ஒழுகிடந்தாய்மை" என்று அந்த வாக்கியத்தின் தார்ப்பரியத்தை உணர்ந்து தாய்க் குலத்திற்கே முக்கியத்துவமளித்து முன்னணிக்கு வந்த தலைவர் இவர் இவரின் படத்திற்கு ஆராத்தி எடுத்து மகிழும் ஆயிரமாயிரம் தாய்க் குலத்து மாதர்களின் தலைமகன் இவர். இவர் வாயால் தம் குழந்தைகளுக்குப் பெயர் சூட்ட வேண்டுமென்பதற்காக கொட்டும்பனியையும்பொருட்படுத்தாது விடியவிடிய விழித்திருக்கும் இலட்சோப லட்சம் மாதர்களின் மானசீகத்தலைவர் இவர். தாய்மையின் தத்துவத்தையும் தார்ப்பரியத்தையும் உணர்ந்தமையால் உத்தமத் தலைவராக உயர்ந்துநிற்கும் உண்மையாளர் இவர்.

நடிகர்களாலும் நாடாளமுடியும் என்பதை நானிலத்துக்குப் பறைசாற்றிய இவர் அரசியலில் சாதித்தவை பல. மாநிலக் கட்சிகள் மாநிலங்களிலேயே அமைச்சர் பதவிகளை அலங்கரிக்கலாம் என்று இந்தியாவில் இருந்த நிலையை மாற்றி, சரண்சிங்கின் ஆட்சியின்போது இரண்டு அமைச்சர்களை தன் கழகத்தின் சார்பில் மத்தியில் உருவாக்கிய மாபெரும் தலைவர் இவர்.

தமிழ்நாடு பல தலைமை அமைச்சர்களைக் கண்ட மாநிலம். அடுக்கான பட்டங்களைத் தரித்துநின்ற தலைவர்கள்கூட காணுத வெற்றியை, தொடர்ந்தோச்சியாக மூன்று பொதுத் தேர்தல்களில் வென்று முதலமைச்சரான தன் மூலம் கண்டு, வரலாறு படைத்த நாயகர் இவர்.

அறிஞர் அண்ணவின் ஆத்ம பலத்தையே தன் மூலதனமாக்கி அரியணையேறிய அன்புத் தலைவர் இவர். அறிஞர் கமல்ஷா சொன்னர், "அதிர்ஷ்டசாலியைக் கடலில் தூக்கிப்போட்டாலும் அவன் ஒரு மீனைக் கவ்விக் கொண்டு வெளியே வந்து விடுவான்" என்று அவரது கூற்றை மெய்ப்பிப்பது போல் கழகத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டபோதும் கலங்காது, திண்டுக்கல் தொகுதியைக் கவ்வி அரசியலில் கரையேற கலங்கரை விளக்கம் கண்ட தலைவர் இவர்.

கும்பகோணம் ஆனையடிஸ் கூலைத் தவிர வேறு பள்ளியின் படி ஏறி அறியாத இவர் பல்லாயிரம் மாணவர்களுக்கு சத்துணவு கொடுத்து பசி தீர்த்து கல்வி அளிக்கும் காவலனுக இருந்து கொண்டிருக்கிறர். இலவசக்கல்வி அளிக்கவே உலகம் திண்டாடும் இன்றைய கால கட்டத்தில் இலவச உணவு அளிப்பது ஒரு உலக சாதனையே தவிர வேறல்ல ஏழைக்கு எழுத்து அறிவிப்பதையும் அன்னசத்திரம் அமைப்பதையும் இணைத்து பாரதி பாடியது போல் இரண்டையும் ஒன்ருகச் செயற்படுத்தியிருக்கும் செம்மல் இவர்.

ஆளுமையும் ஆற்றலும் மிக்க இத் தலைவர் தனது அரசியல் சாணக்கியத்தை இலங்கைத் தமிழர்பால் முற்ருகப் பிரயோகித்து, எமக்கு முழுமையானதும் முடிவானதுமான தீர்வைத்தர முன்வர வேண்டுமென்பதே ஈழத் தமிழரின் ஏகோபித்த பிரார்த்தனையாகும். ஈழத்தில் சைவமும் பௌத்தமும் பிணக்குருது உரியமுறையில தழைத்துச் செழிக்க இராஜ இராஜ சோழன் வழிவகுத்ததாக சரித்திரம் சொல்கிறது. அடக்குமுறையும் படையெடுப்பும் இல்லாது பாரிய பண்பாட்டின் அடிப்படையிலும் பரஸ்பர ஒற்றுமையின் அத்திவாரத்திலும் அதே சரித்திரம் திருப்புவதற்கு எம். ஜி. ஆர் அவர்கள் வழி வகுப்பாராகயிருந்தால் அவர் என்றும் இறவாத தலைவராக எம் மத்தியில் வீற்றிருப்பார்.

**எஸ். கே. மகேந்திரன்**




## சமயத்தின் அவசரம்

'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' என்பது யாழ்ப்பாணமும், அகில உலக சைவ நன்மக்களும் தமிழ் மக்களும் செய்த அரும்பெரும் தவப்பயனுய்த் தோன்றிய நாவலர் பெருமான் நமக்குச் செய்த உபதேசமாகும்.

உலகிலே அனுபவக்கத்தக்க இன்பங்கள்; பாவத்தையும் புகழ்- அதிகாரம் முதலிய சிறப்புக்களையும் விரும்பும் பலர் நாவலரின் அருமருந்தன்ன இந்த உபதேசத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என்றும் - இப்படியான உபதேசங்கள் தமது அந்திம காலத்துக்குப் பயன்படலாம் என்று கருதுகிறர்கள். உண்மையல்;

அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும் விமானமூலம் பிரயாணம் செய்பவர்கள் பிரயாணத்தில் மகிழ்வதும் வழியில் தங்குமிடங்களில் பல இன்ப அனுபவங்களைப் பெறுவதும்போல நாம் மனிதவாழ்வில் இன்புறக் காரணமான புகழ்,அதிகாரம், இன்ப அனுபவங்கள் என்பன இருக்கவேண்டுமேயன்றி இவையே குறிக்கோளாக இருத்தல் ஆகாது இந்த உண்மையை விளங்கிக்கொள்வதற்குப் பின்வருமாறு சிந்தித்துப் பார்க்கலாம்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது. நாம் கல்லாதவனும் கற்றவனுமாகிய சிலர் நம்மைப் புகழ்ந்து மரியாதை பண்ணுவதற்காகவன்று. இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது. நம்மை நம்பியவர்களையும் நம்மிடம் உதவிநாடி வருபவர்களை ஏமாற்றி பொருளும் புகழும்சம்பாதிக்கவன்று, என்ன போல சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொரு மனிதனும் தன் செயல்களையும் சிந்தனைகளையும் பரிசீலிக்கவேண்டும்.

தண்ணீர்த் தாகத்தில் துன்புறும் ஒருவன் மனிதனுக்கு அத்தியாவசியமான பொருள் நீர் ஒன்றே என்று கூறுவதுபோல குறுகிய வட்டங்களுள் சிந்திக்காது மனித வாழ்வின் உயர்ந்த பயனை அடையவேண்டும் என்னும் கொள்கையுடன் இருப்பதும் இப்படியான கொள்கையைப் பல கோணங்களில் நிறைவுறச்செய்யும் சைவசமய அறிவைப் பெருக்குதலும் அநுட்டித்தலும் அவசியம்.

வாய்த்ததுநம் தமக்கு
ஈதோர் பிறவி மதித்
திடுமின்
பார்த்தற்குப் பாசுபதமருள்
செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரம்
தீவளைத்தான் தில்லையம்
பலத்துக்
கூத்தனிற் கூத்துவல்லார்
உளரோ என்றன்கோல்
வளைக்கே.

— திருநாவுக்கரசர்

**- அருளாளன்**

## பரீட்சையில் சித்தி

(மானிப்பாய்)

மானிப்பாய் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியினர் சமீபத்தில் நடத்திய 2ம் பிரிவு சமய பாடப் பரீட்சையில் செல்வி சே. ஜீவானந்தி, செல்வி சே. இந்திராபிரியதர்ஷினி ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

(பா)

உலகச் செய்திகள்

### அணு ஆயுதபரிசோதனை நிறுத்தம்:

# தொடர்ந்து நீடிக்க சோவியத் தலைவர் தீர்மானம்!

## அமெரிக்கா வரவேற்பு!!

மாஸ்க்கோ, ஜன 16

**அணுஆயுத பரிசோதனைகளை மேலும் மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைக்க சோவியத்தலைவர் திரு. மிக்கேல் கோபச்சேவ் இணக்கம் தெரிவித்துள்ளார். கடந்த டிசம்பர் மாதம் 31ந் திகதியுடன் சோவியத் யூனியனின் அணு ஆயுத பரிசோதனை இடைநிறுத்தக் காலக்கெடு முடிவடைந்தது. ஆயினும் திரு. கோபச்சேவ் மேலும் 3 மாதம் வரை இந்த இடைநிறுத்தத்தை மேற்கொள்ள முன்வந்துள்ளார்.**

திரு. கோபச்சேவின் இப் புதிய முடிவை அமெரிக்க அதிபர் திரு. றீகன் வரவேற்றுள்ளார். ஆயினும் சோவியத்தின் இந்த நிலைப்பாடு எவ்வளவு தூரம் காத்திரமாக இருக்கும் மென்பதில் வாஷிங்டன் சந்தேகம்தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலைமாதம் ஜப்பான்மீது அணுகுண்டு வீசப்பட்ட 40வது ஆண்டு பூர்த்தியிலிருந்து 6 மாதங்களுக்கு (டிசம்பர்வரை) சோவியத் அணு ஆயுத பரிசோதனைகளை நிறுத்திவைத்தது.

அமெரிக்காவையும் இப்படிச் செய்யும்படி அது பணித்திருந்தது. ஆயினும்அமெரிக்கா இதற்குஉடன்படவில்லை. இருந்தபோதிலும் கடந்த நவம்பர் மாதம் அமெரிக்க — சோவியத்தலைவர்களின் சந்திப்பின் போது அணு ஆயுதக் கட்டுப்பாடுகள் குறித்து பல புரிந்துணர்வு மிக்ககருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இதன் அடிப்படையிலேயே புதிய ஆண்டில் மார்ச் மாதம் வரை அணுஆயுத பரிசோதனை



இடைநிறுத்தத்தை சோவியத் அதிபர் நீடித்துள்ளார்.

அமெரிக்காவும் இப் புதிய ஆண்டில் ஒத்துழைக்கும் பட்சத்தில் இந்த நீடிப்பை காலவரையின்றித் தொடரவும் அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கூடவே அணுஆயுதங்களையும் கணிசமாகக் குறைக்கவும், இருதரப்பிலும் 6 ஆயிரம் பேர்வரை இராணுவஆட் குறைப்புச் செய்யவும், இரசாயன ஆயுதங்களை முற்ருக கட்டுப்படுத்தவும் திரு. கோபச்சேவ் விருப்பந் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. றீகன் சோவியத்தின் இப்புதிய அறிவிப்புக்களை வரவேற்றுள்ளார். இவை ஆயுதக்கட்டுப்பாட்டு முயற்சிகளுக்கு வழிவகுக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆயினும் சோவியத்தின் இந்த அறிவிப்புக்கள் சந்தேகமளிக்கின்றன என்று வெள்ளைமாளிகை தெரிவித்துள்ளது. [கி]

## 'பொங்கலை உண்ண மைந்தர் இல்லை!' பி. பி. ஸி. ஆதங்கம்!!

[லண்டன்]

தமிழ்கூறும் நல்லுலகிற்கு, லண்டன் பி. பி. ஸி. நடாத்தும் தமிழ்சேவையில் பொங்கலன்று இலங்கை பற்றி முத்தான பொங்கல் கவிதை இடம்பெற்றது. இக்கவிதையை ஆக்கியவர் சங்கர் அண்ணை.

சங்கர் பி. பி. ஸி. யின் தமிழ்சேவைப் பொறுப்பாளர். இக்கவிதை உருகாதவர் நெஞ்சையும் உருகவைத்தது. இக்கவிதையில் ''தமிழ்கூறும் நல்லுலகிற்குப் பொங்கலோ பொங்கல்; இலங்கை வாழ் தமிழர்க்குப் பொங்கலோ பொங்கல்...... பொங்கிய பொங்கலை உண்பதற்கு அங்கு மைந்தரில்லை.

வடபுலம் முதல் கிழக்குப்புலம் வரை பொட்டிட்டு பூச்சூட்டி பொங்குவதற்குப் பெண்களில்லை... கருமேகங்களைக் கிழித்துக்கொண்டு கதிரவன்விடிவுதரும் நாள் தமிழர்க்குப் பொங்கலோ பொங்கல்... என்று அடிகள் அமைந்திருந்தன. (கெ)

## லெபனனில் 45 பேர் பலி 250 பேர் காயம்!

பெய்ரூட், ஜன. 16

லெபனனில் அரசியல் குழுக்களுடைய கடந்த வாரம் முதல் இடம்பெற்ற மோதல்களில் 45 பேர் கொல்லப்பட்டனர். 250 பேர் காயமடைந்தனர்.

சிரியா ஆதரவுடன் லெபனனின் சமரசத் திட்டமொன்றினை ஏற்றது தொடர்பாகவே இந்த மோதல்இடம்பெற்றன.

கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் குழுக்கள் இம்மோதலில் இறங்கின. இறுதியாகப் பலத்த சண்டையின்பின்னர் சிரியாத் தரப்பு சமாதானத் திட்டம் வாபஸ் பெறப்பட்டது.

இதனைத் தயாரித்த எடி ஹொபேக்கா என்ற லெபனன் அரசியல் தலைவருக்கெதிராக லெபனன் ஜனாதிபதி அமீன் ஜமாயலின் இராணுவமும், மெலே முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த டாசடர் ஜானுர் என்பவரின் இராணுவமும். தீவிர இராணுவ நடவடிக்கையில் குதித்தன. இதனையடுத்தே கிரிய திட்டத்தைக் கைவிட்டு ஜாஜா சரணடைந்ததாகக் கூறப்பட்டது. (கி)

### ஹொங்கொங்கில் வாழும்

## இந்திய உபகண்டத் தலைவர்கள் பிரிட்டிஷ் பிரஜாவுரிமை கோருகின்றனர்!

விக்டோரியா, ஜன 16

ஹொங்கொங்கில் வசிக்கும் இந்திய, பாகிஸ்தான், பங்களாதேஷ் வம்சாவளி மக்கள் தமக்கு பிரிட்டிஷ் குடியுரிமை வழங்குமாறு பிரிட்டிஷ்அரசை வற்புறுத்தியுள்ளனர்.

சீனுவுக்கு சொந்தமான ஹொங்கொங் தீவு பிரிட்டிஷாரினுல் 99 வருட குத்தகைக்கு எடுக்கப்பட்டது. குத்தகைக்காலம் 1990ம் ஆண்டுடன்முடிவடைவதால் இத்தீவு மீண்டும் சீனுவிடமே கையளிக்கப்படவுள்ளது,

இவ்வாறு மீண்டும்சீனுவுக்கு இத்தீவு கைமாறியதும் தாம் பாதிப்புக்குள்ளாகலாம் எனக் கருதியதாலேயே இந்திய உபகண்டத்தைச் சேர்ந்த இந்த மூன்று நாட்டுமக்களின் பிரதிநிதிகள் குழுஒன்று அண்மையில் பிரிட்டிஷ் உள்ளூராட்சி வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை சந்தித்து தமது வேண்டுகோளை வற்புறுத்தியது.

ஹொங்கொங்கில் வசிக்கும் சீனமக்கள், சீனுவிடம் இது கையளிக்கப்பட்டதும் சீனுபிரஜாவுரிமை பெற்றுவிடுவர். ஆனுல் இந்திய உடகண்டத்தவர்கள் பொருளாதார சமூக ரீதியாக ஒதுக்கப்படலாம் என இக்குழு அச்சம் தெரிவித்துள்ளது. ஆகையினுல் தமது பாதுகாப்பு, அமைதி கருதி தமக்கு பிரிட்டிஷ் குடியுரிமை வழங்கவேண்டுமென இவர்கள் கேட்டுள்ளனர்.

ஹொங்கொங் தீவில் சுமார் 10,000 இந்தியர்களும், 5000 பாகிஸ்தான் பங்களாதேஷ் வாசிகளும் உள்ளனர். [செ

## 'திருக்குறள்' மொழிபெயர்ப்புக்கு ரூ. 10 ஆயிரம்!

சென்னை, ஜன 16.

''பொய்யா மொழி'' யான திருக்குறளை ஏனைய இந்திய மொழிகளில் திறமையாக மொழிபெயர்ப்போருக்கு ரூபா பத்தாயிரம் வழங்கப்படவிருக்கிறது.

தமிழக நிதியமைச்சர் இதனை நேற்று அறிவித்தார். நேற்றுக் சென்னையில் இடம்பெற்ற திருவள்ளுவர் தினத்தில் பங்குபற்றிப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''திருக்குறள்'' மொழி பெயர்ப்புக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலேயே இத்திட்டத்தைத் தமிழக அரச முன்வைத்துள்ளது.

நேற்றைய வைபவத்தில் திருக்குறள் ஆய்வு சம்பந்தமாகக் குன்றக்குடி அடிகளாருக்குத் தமிழக அரசு ரூபா பத்தாயிரம் வழங்கிக் கௌரவித்தது. (கி)

## வடக்கு அராலி மக்களுக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, செட்டியாமடம் ஊடாக யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஊடாக செட்டியாமடமும் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்கான பஸ் சேவையில்லாமல் மிகவும் சிரமப்பட்டுவந்த இப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பொது நிறுவனங்கள் விடுத்த வேண்டுதலின் பேரில் அராலி தனியார்துறை மினி பஸ் சங்கம் மேற்குறிப்பிட்ட பாதைகளில் அரை மணித்தியால இடை வெளிக்கொரு தடவை மினி பஸ்களை சேவையிலீடுபத்தி வருகின்ருர்கள். இச்சேவையை தொடர்ந்து நடத்துவதற்கு இப்பகுதி மக்கள் ஒத்துழைப்பு வழங்கும்படி நாகேந்திர மடம் சன சமூக நிலையம், அறிவொளி சன சமூக நிலையம், கலைவாணி சன சமூக நிலையம், பாரதி சன சமூக நிலையம், அராலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், திருமகள் சன சமூக நிலையம் ஆகிய பொது நிறுவனங்கள் வடக்கு அராலி மக்களுக்கு துண்டுப் பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## போதைவஸ்து பாவனை உதவிஅரச அதிபர் கவலை!

[நெடுந்தீவு]

''போதைவஸ்துக் கொடுமை இளைஞர்களை படுகுழிக்குள் இட்டுச் செல்கின்றது. இளைஞர்களின் ஊக்கம் உழைப்பு எல்லாமே கீழ்நிலைக்குத் தள்ளப்படுகிறது''

இவ்வாறு நெடுந்தீவுப் பிரிவின் உதவி அரசாங்க அதிபர் திரு.ரி. சந்திரசேகரம் நெடுந்தீவு மகாவித்தியாலய நவரத்தினசிங்கம் திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற சுகாதார விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு முன்னுள் நெடுந்தீவு கிராமசபை,கிராமோதய சபை பிரதேசசபையின் தலைவராக இருந்த திரு.த. அம்பலம் தலைமை வகித்தார்.

வைத்தியக் கலாநிதி செல்வி எஸ். கதிர்காமநாதன் புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு.ஏ.ஈ. ஆறுமுகம்ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

திரு. சந்திரசேகரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''போதைவஸ்துப் பாவனை வடக்குக்கிழக்குப் பகுதிகளில் குறைவாக இருந்தபோதிலும் உலக அரங்கில் தமிழ் இளைஞர்கள் போதைவஸ்துக்கடத்தலில் ஈடுபடுவதைக் கேள்விப்பட நாம்மிகவும் வருத்தமடைய வேண்டியவர்களாகவுள்ளோம்'' என்ருர்.

நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் நெடுந்தீவில் இப்படியான ஒருவிழாவை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைப்புத்தந்த சகலருக்கும் பொது சௌக்கிய அலுவலர் திரு. எஸ். கணேஸ் நன்றி தெரிவித்தார்.

நெடுந்தீவுப் பாடசாலைகளுக்கிடையிலான சுகாதாரப் பேச்சு, நடனம், நாடகம்,வில்லுப்பாட்டு போன்றபோட்டிகள் நடைபெற்று பரிசில்களும் வழங்கப்பட்டன.

## மீனவருக்கு விசேஷ உணவு முத்திரை

[யாழ்ப்பாணம்]

கரையோரப் பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மூன்ருவது தடவையாக 6 மாதங்களுக்கு விசேஷ உணவு முத்திரைவழங்குவதற்கு யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## இராணுவ முகாம்களைச் சுற்றி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவமுகாம் மீது 48மணி நேரம் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட தாக்குதலையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தாக்குதலை முறியடிக்க பீரங்கிகள் உட்பட பெரிய ஆயுதங்களைப் பயன்படுத்த பாதுகாப்புபடையினருக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் முகாமைப் பாதுகாக்க அவர்கள் இத்தகைய ஆயுதங்களைப் பயன்படுத்துவார்கள் என்றும் அரச தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

"தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இராணுவத்தினர் பதில் தாக்குதல் மேற்கொள்ளும்போது பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாது இருக்கும். ஆகவே பொதுமக்கள் பாதுகாப்புக்கருதி தங்கள் நடமாட்டத்தில் அவதானமாக இருக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்" என்று மேற்படி அரசுத் தகவல் தெரிவித்தது.

நேற்று அதிகாலை தீவிரவாதிகள் யாழ்ப்பாணம்கோட்டை முகாம் மீது பீரங்கித்தாக்குதல் நடத்தியதாகவும் இராணுவத்தினர் திருப்பிச்சுட்டதல் மூன்று தீவிரவாதிகள் காயமடைந்ததாகவும், இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது, [து]

## இரு முகாம்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது மறைவிடத்திலிருந்து படையினரால் தீவிரவாத இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன்; பெருந்தொகையான வீட்டு பாவனைப் பொருட்கள், ஒரு கார் பற்றறி, வாகன உதிரிப்பாகங்கள் இரண்டு சைக்கிள்கள், ஒரு அம்பிலியெயர், பெருந்தொகையான செம்பு உட்பட அப்புத்தளை, ஹங்குராங்கெற்றை ஆகிய இரு மலையகப் பிரதேசங்களின் வரை படங்களும் எடுக்கப்பட்டுள்ளனவாம். இந்த மறைவிடம் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தினுடையது என்று தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது மறைவிடத்தில் ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு வாகனங்கள், ஒரு வயர் சுருள், உணவுப்பொருட்கள், தீவிரவாதிகளின் புகைப்படங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த மறைவிடம் தமிழீழ விடுதலை இயக்கத்தினுடையது என்று தெரிவிக்கப்பட்டது. [ய-ரா]

## யாழ். நகரில் மீண்டும் ஏற்பட்ட பதற்றம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தால் இருவர் பலியானார்கள். இருவர் காயமடைந்தனர்.

மருதானையைச் சேர்ந்த காமில் அனஸ் (33 வயது), காத்தான்குடியைச்சேர்ந்த அப்துல் ஹமீட் (20வயது) ஆகியோரே பலியானவர்களாகும். இச்சம்பவத்தில் படுகாயமடைந்த யூசுப் (22வயது) உடனடியாக யாழ்.ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அவசரசத்திர சிகிச்சைக்குபின்னர், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்த மனேகர் (27 வயது) என்பவரும் காயமடைந்தார்.

### மரண விசாரணை இல்லை

பலியானவர்கள் மரணம் தொடர்பாக பிரேத பரிசோதனை எதுவும் நடைபெறவில்லை

புல்லுக்குத்தி தோட்டத்தில் குண்டு தாக்கி முன்பக்க ஓலை வீடு சேதமடைந்துள்ளது. விறந்தையிலுள்ள இரு கதிரை எங்கும் ஒரே இரத்தக்கறை காணப்பட்டது. அப்பகுதியில் பெருந்திரளானமுஸ்லிம் மக்கள் சோகத்துடன் காணப்பட்டனர்.

ஜும்மா மொஸ்க் லேன், பகுதியிலும் ஒரு குண்டுவெடித்ததால், பெரிய பள்ளிவாசலுக்கு முன்பாக உள்ள சில வீடுகள் சேதமடைந்துள்ளன. வீட்டுக் கூரைகளில் பெரும் துவாரங்கள் காணப்படுகின்றன.

### உடுப்பியில் ஒருவர் பலி

சத்திரத்து சந்திக்குச் சமீபத்திலுள்ள உடுப்பி லொட்ஜில் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த ஜோசப் பத்திநாதர் (5 பிள்ளைகளுண்டு. 34 வயது) என்பவர் துப்பாக்கிச் சூட்டிற்கும் பலியானார். இவர் ஒரு ட்ராக்டர் சாரதி, இவர் கடைவசலில் நின்று தேநீர் குடிப்பதற்குத் தயாராக இருந்தபோது வெடி விழுந்துள்ளது.

மானிப்பாய்வீதியில் பெட்டிக் கடை வைத்திருக்கும் கோபால்ராஜா [35 வயது], வி. தங்கராசா [55 வயது], கூலிவேலை செய்யும் குருநாகலையைச்சேர்ந்த ஆர். பண்டா [50 வயது], வீரசிங்கம் [171 வயது], காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த கந்தையா (50 வயது) ஆகியோரும் காயமடைந்தனர்

### வைத்தீஸ்வரா அருகில்

வண்ணார்பண்ணை சிவன் கோவில் வடக்குவீதியில் வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள மா. சுபேந்திரன் என்பவரின் வீட்டுசமயலறைமீது விழுந்த குண்டு வெடித்துச் சிதறியதால், குசினிக்கூரையும், சுவர்களும் சின்னாபின்னமானது அதற்குள்ளிருந்த 8 கோழிகள் பலியாகின. அச்சமயம் அங்கு எவரும் இருக்கவில்லை. இக்குண்டு வெடித்த துகள்கள் அடுத்த வீட்டு முற்றத்தில் நின்ற இரு சகோதரர்களைத் தாக்கியதால் படுகாயமுற்றனர். காயமடைந்த க, நடராசா [35-வயது], க. பால சுப்பிரமணியம் (40 வயது) இருவரும் உடனடியாக தனியார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

மிட்டாஸ்கடைச்சந்தியில், இருகடைகள் மீது குண்டுவீசப்பட்டுள்ளதால் முன்பக்கம் சேதமடைந்துள்ளது. நகரில் வேறு பலஇடங்களிலும், குண்டு வீச்சினால் கடைகள் சேதமடைந்துள்ளன.

நேற்று முழுநாளும் யாழ். பஸ்நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது. வ. போ. ச. பஸ்போக்குவரத்து வழக்கம் போல் நடைபெறவில்லை. பாடசாலைகளுக்கும் மாணவர்கள் வரவில்லை. தூர இடங்களிலிருந்து வந்த ஆசிரியர்களும், அரசாங்க ஊழியர்களும் கையெழுத்துப்போட்டுவிட்டு உடன்சென்று விட்டனர். மினிபஸ் சேவையும் நடைபெறவில்லை.

அரசாங்க, திணைக்களங்களில், மிகக்குறைவாக வந்திருந்த ஊழியர்களும் திரும்பிவிட்டனர்.

யாழ்.மாநகரசபை செயலகங்களுக்கும் மிகக்குறைவான ஊழியர்களே வந்திருந்தனர். அவர்களும் உடன் திரும்பிவிட்டனர். தனியார் கல்லூரிகளும் நடைபெறவில்லை.

நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள், கட்சிக்காரர்சாட்சிகள் வராததினால் விசாரணை நடைபெறவில்லை.

யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதி வெறிச்சோடிக். காணப்பட்டது மிகச்சிலரே பத்து மணிக்கு பின்னர் வந்திருந்தனர். கிளினிக்குகளிலும் மிகச்சிலரே வந்திருந்தனர். நகரில் கடைகள், வர்த்தக நிலையங்கள்திறக்கப்படவில்லை.

(க. மா)


## அறிவித்தல்

மட்டுவில் ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினரால் 14-01-1986 அன்று நடைபெறஇருந்த அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு 14-02-1986 இற்குப் பின் போடப்பட்டுள்ளது.

நிர்வாகிகள்.

C 236



## 7 வது ஆண்டு நினைவஞ்சலி

ஆ. க.

ஆறுமுகம் தம்பி

[புகையிரத நிலைய அத்தியட்சகர் மருதானை]



அன்புடன் அழியா இன்பநினைவுகளை மீட்டு வருந்தும் அன்பு மனைவி கமலா, சகோதரங்கள், மைத்துனர், மைத்துனிகள், மருமக்கள்.

274. நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[A-88]



## அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

மல்லாகம்-தொந்தனை கலைமகள் சன சமூக நிலையத்தினரால் தைப்பொங்கல் தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட ரிக்கட்டுகளின் இலக்கவிபரம் வருமாறு: 1ம் பரிசு 1048 மல்லாகம், [2] 2120 நாவற்குழி, [3] 1579 —, [4] 1090 கோப்பாய், [5] 1131 , [6] 1608 அளவெட்டி, [7] 289 தெல்லிப்பளை, [8] 696 மல்லாகம், [9] 622 கட்டுவன், [10] 1322 மல்லாகம், [11] 1731 ஏழாலை [12] 1890 மல்லாகம், [13] 504 — [14] 1236 —, [15] 1310 மல்லாகம்.

அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் 20-01-86க்கும் 5-2-86க்கும் இடையில் மேற்படி நிலையத்தில் வந்து பரிசில்களை பெற்றுக்கொள்ளவும் தவறும் பட்சத்தில் வேறோர் திகதியில் அவை ஏலத்தில் விற்பனை செய்யப்படும். [A90] [தலைவர்- கலைமகள் ச.ச.நி]



## 31வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



நடராசா

மாணிக்கநடராசா

(இளைப்பாறிய D R O. வும்சிறுவர்நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்கள உதவி ஆணையாளரும்)

தோற்றம்: 24-11-1924

மறைவு: 16-12-1985

ஒரு மாதகாலம் ஓடி மறைந்தலும் உங்கள் அன்பும் நினைவும் எங்கள் மனதை விட்டு என்றும் மறையாது.

அன்னாரின் இறுதிக்கிரியைகளிலும், 15-01-85 அன்று அந்தியேட்டி சபீண்டீகரண கிரியைகளிலும் பங்குபற்றியும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், காலமறிந்து மற்றும் பல உதவிகள் செய்தும் எமது துயரத்தை பகிர்ந்துகொண்டசுற்றத்தார், நண்பர்கள். அன்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

பிள்ளைகள், மனைவி, மருமக்கள்.

81, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். C 238



எம்பயர்

7 அடித்திரையில்

10-30, 2-30, 6-30,

பாக்கியராஜ்—ராதிகா

பொய் சாட்சி



லிடோ சினிமா

10-30, 2-30, 4-30, 6-30

நாகேஷ் - விஜயலதா - M.M.R.வாசு

ஹலோ பாட்னர்



வெலிங்டன்

10-30, 2-30, 6-30

M. G. R.—லதா நடித்த

நீதிக்கு தலைவணங்கு

[புதிய பிரதி]



நியூ விக்ரேஸ்

புதிய

வீடியோபட வெளியீடுகள்

★ பிறந்தேன் வளர்ந்தேன்

கவுண்டமணி — ஜீவிதா

நியூ விக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

யாழ்ப்பாணம். தொலைபேசி: 23532

A 89



எமது புதிய வெளியீடு

கவுண்டமணி நடித்த

தேவர் பிலிம்ஸ்

"பிறந்தேன் வளர்ந்தேன்"

வீடியோ பிரசாத்,

232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(A 87)



## அறிவித்தல்

### கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டம்

### புதிய அதிபர் சேவையில் சேர்த்துக்கொள்ளல்

மேற்படி விடயம் சம்பந்தமாக பின்வரும் பதவிகள் வகிப்போரிடமிருந்து விபரங்கள் கல்வி அதிபரால் கோரப்படுகின்றன.

விபரங்களை தத்தம் வட்டாரக்கல்வி அதிபர்கள் ஊடாக எமக்கு 24-01-86க்கு முன்பதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகைமை:

1. 2-ம், 3-ம் தர விசேட பதவிகள் வகிப்போர்.
2. 3-ம், 4-ம், 5-ம் தர அதிபர் பதவி வகிப்போர்.
3. மேற்படி சேவைகளிலிருந்து 01-01-85ல் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இளைப்பாறியவர்கள்.
4. மேற்படி தகைமைகளுடன் கல்வி அமைச்சின் வேறு பிரிவுகளில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்கள்.

ம. சிமியாம்பிள்ளை
கல்விப் பணிப்பாளர்,
யாழ். மாவட்டம்.

A 86

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY


## சந்திப்பு நடக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றுக்காலை ஏற்பட்ட பதற்ற நிலைகாரணமாக யாழ். அரசாங்க இலாகா தலைவர்கள் வட பகுதி இணைப்பதிகாரி பிரிகேடியர் எச். எஸ். ரூ சிங்கா சந்திப்பு நடைபெறவில்லை.

## கனகபுரத்தில் 4 பேர் கைது

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் பாதுகாப்புப் படையினரால் நான்குபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஒரு கண்ணிவெடிச் சம்பவத்தைத் தொடர்ந்தே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர், சம்பவத்தில் பாதுகாப்புப் படையினருக்கோ. பொதுமக்களுக்கோ எவ்விதசேதமும் ஏற்படவில்லை. [ய-ரா]

## இந்திய மீனவர் கடற்படையிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கற்பிட்டி கடற்பிரதேசத்தில் படகொன்றில் காணப்பட்ட சில இந்திய மீனவர்களை கற்பிட்டி பொலிசார் நேற்று படகுடன் சேர்த்து கைது செய்துள்ளனர்.

இவர்கள் தொடர்பாகவிசாரணை நடத்துவதற்காக இவர்கள் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-ய)

## இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியதபால் கந்தோர் நேற்று செயல்படவில்லை


இக்கந்தோரிலுள்ள தேனீர்ச் சாலையின் ஒருபகுதி நேற்றுக் காலை குண்டுத் தாக்குதலுக்குள்ளாகிசேதமடைந்துள்ளது.

## இன்று முதல் கோட்டையில் ரயில் டிக்கட்

[யாழ்ப்பாணம்]

யாழ் தேவி, இன்ரசிற்றி ரயில்களுக்கான பிரயாணச் சீட்டுக்கள் இன்று வெள்ளிக்கிழமை முதல் யாழ். பொலிஸ நிலைய வளவிலுள்ள மக்கள் வங்கி மேல் மாடிக் கட்டிடத்தி வைத்து விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். புகையிரத நிலைய பிரதம அதிபர் தெரிவித்துள்ளார்.

பணிஒடர்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட பிரயாணச் சீட்டுக்கள் இன்றுமுதல் பணம் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாமெனவும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு இன்ரசிற்றிக்கு ரூபா 150ம், யாழ் தேவி 3ம் வகுப்புக்கு ரூபா 59-30ம், 2ம் வகுப்புக்கு 161-30ம் நேரடியாக செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் மேலும் அறிவித்துள்ளார். [ச]



நேற்றைய சம்பவங்களில் காயமடைந்தவர்களில் இருவர். இரண்டாவது படத்தில் காணப்படுபவர் யாழ். மானிப்பாய் வீதியைச் சேர்ந்த கே.கோபால்ராஜ். படங்கள்:'தேவா'

## இந்தியா வெற்றி

(மெல்போர்ண்)

மெல்போர்ணில்நடந்தஉலகக் கோப்பைக்கான சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நேற்று இந்தியா அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்தது.

எட்டு விக்கெட்டுக்கள் கையிருப்புடன் முப்பத்திநான்கு பந்து வீச்சுக்கள் இருக்கையில் இந்திய அணி வெற்றி பெறுவதற்கு தேவையான 161 ஓட்டங்களை எடுத்தது. கவாஸ்கரும், அமர்நாத்தும் சேர்ந்து 89 ஓட்டங்களை சேர்த்தது நேற்றைய ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

## பிரிட்டனில் தஞ்சம் தேடியவர்கள்

[கொழும்பு]

பிரிட்டனில் எரிபொருள் மோசடியில் ஈடுபட்ட 30 தமிழர்கள் பிரிட்டன் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு ஒவ்வொருவரும் 500 ஸ்ரேலிங் பவுண் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுள் மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இந்த 30 தமிழர்களும் 83ம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்தின் பின்னர் பிரிட்டனில் தஞ்சம்புகுந்தவர்களாவர், [ச-ய]

## பள்ளிவாசல் கண்ணாடி சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜும்மா மொஸ்க் லேன் பெரிய பள்ளிவாசல் யன்னல் கண்ணாடி ஒன்று நேற்றுக்காலை நடந்த தாக்குதலில் சேதமடைந்துள்ளது

இப்பள்ளிவாசலுக்கு சமீபத்திலுள்ள மரமொன்றின் மீது குண்டுவிழுந்து வெடித்துச் சிதறியதால், அப்பகுதியிலுள்ள சில வீடுகளும் சேதமடைந்துள்ளன. (க)

## மரண அறிவித்தல்

### திரு. பொ. பாலசிங்கம் (கனகசபை)

புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் ஒட்டுமடவீதி இல.19ல் வசிப்பவருமாகிய பொன்னையா பாலசிங்கம் (கனகசபை) 15-01-86ல் காலமானார். இவர் பார்வதியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, இராசமணி, பாலசுந்தரம் (கஸ்தூரியார் வீதி, தெய்வநாயகி அடைவுகடை உரிமையாளரும், கொழும்பு வர்த்தகரும்) ஆகியோரின் தாப்பனும், பரராசசிங்கம், அரசாங்க அச்சுக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சித்திரவேலு, தெய்வநாயகி ஆகியோரின் மாமனும், நா. கந்தையாவின் மைத்துனரும், திருக்குமார் (ஜேர்மனி), சத்தியகுமார், சுகிர்தா, கௌரி, ஜெயகுமார், ஜெயந்தன், விஜிதா, நந்தினி, பாமினி, மயூரன், தெய்வபாலன், தெய்வமலர், பாரதி, லதா, சிந்து. கவிதா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை 18-01-86 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று, கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
(C 244) பா. பாலசுந்தரம் (மகன்)

## 61 பெண்கள் ஆஸ்பத்திரியில் அனுமதி

[யாழ்ப்பாணம்]

இரத்மலானை புடவை ஆலை ஒன்றில் ஏற்பட்ட மின்விபத்தொன்றினால் அங்கு பணிபுரியும் 61பெண்கள் களுபோவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 30பேர் சிகிச்சையின்பின் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறியுள்ளனர். ஏனையவர்கள் தொடர்ந்து ஆஸ்பத்திரிகளிலேயே தங்கிருந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதுதொடர்பாக பூரணவிசாரணை நடாத்த தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது. [ச-ய]

## மரண அறிவித்தல்

### ஆ. வ. சதாசிவம் J.P.U.M.

(சட்டத்தரணி)

பிரபல சட்டத்தரணியும், உத்தியோகப் பற்றற்ற நீதிபதியும், முன்னாள் பட்டினசபைத் தலைவருமாகிய திரு. ஆ. வ. சதாசிவம் 16-01-86 வியாழக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற வனித ரத்தினத்தின் அன்புக்கணவரும், திருமகள், கலைமகள் [சட்டத்தரணி], மலைமகள் [ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி], கணேசன் [சவுதி அரேபியா] ஆகியோரின் அன்புத்தந்தையும். திரு. சீ கனகசுந்தரம் [கணக்காளர்], காலஞ்சென்ற திரு. தா திருநவுக்கரசு [முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் வட்டுக்கோட்டை], திரு. க. பரஞ்சோதி. க. எலிசபெத் ஆகியோரின் மாமனருமாவார். அன்னாரின் பூதவுடல் 17-01-86 வெள்ளிக்கிழமை பி. ப. 4 மணிக்கு ''தமிழகம்'', கல்லூரி வீதி, காங்கேசன்துறையிலிருந்து, காங்கேசன்துறை மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

(C237) தகவல்: பிள்ளைகள்.

## அரியாலை...

( 1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவும் இளைஞர்களின் குண்டு வீச்சைத் தொடர்ந்து பஸ்ஸில் இருந்த ஆண், பெண் குழந்தைகள் வயோதிபர் அனைவரும் பஸ்ஸிலிருந்து இராணுவத்தினரால் இறக்கி விடப்பட்டனர் என்றும் பின்னர் இராணுவம் வயல்களினூடாக நகர்ந்து சென்று குண்டு வீசப்படும் திசைகளை நோக்கிச் சுட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழி முகாமிலிருந்து வந்த வாகனங்களில் பின்னர் இராணுவத்தினர் ஏறிச்சென்றனர். இதன் பின்னரே பிரயாணிகள் பிரயாணத்தைத் தொடர்ந்தனர். இச்சம்பவங்களின்போது எப்பகுதிக்கும் காயமேற்பட்டதாகத் தெரியவில்லை. (ஐ)

## மரண அறிவித்தல்

### திரு. மு. மு. மார்க்கண்டு



யாழ். பெரியகடை விஜய சோதிட நிலைய உரிமையாளரும், கொட்டடிவாசியுமான பிரபல எண்சோதிடர் திரு. மு. மு. மார்க்கண்டு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், பகவதியின் அன்புக்கணவரும், தனராஜ் (ஜேர்மனி). இதயராஜ் (பிரான்ஸ்), ஜெயமலர், ஜெயராஜ் (கனடா). விஜயராஜ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18-01-86) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது (கொட்டடி) இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை நண்பர்கள், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி மார்க்கண்டு

(A 239)

## மரண அறிவித்தல்

### திரு. சரவணமுத்து சேனாதிராசா

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த சரவணமுத்து சேனாதிராஜா (இளைப்பாறிய லிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்கள் 15-01-86 அன்று இயற்கை எய்தினார். அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி அற்புதசுந்தரி வைத்தியலிங்கத்தின் அன்புச் சகோதரரும், திரு R. சுப்பிரமணியம் (இளைப்பாறிய தொழிற் கோட்டுத் தலைவர்), திரு R. ஆறுமுகசாமி (இளைப்பாறிய கணக்காளர்), திருமதி லோகநாயகி அப்புத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சத்தியலக்ஷ்மி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இரவீந்திரநாதன் (காப்புறுதி முகவர்). இராஜதிலகம் (நீர்ப்பாசனத் திணைக்களம், முத்தையன்கட்டு), காலஞ்சென்ற சித்திராலக்ஷ்மி, சுரேந்திரநாதன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவனிக்குளம்), ஜெயலக்ஷ்மி (யோசபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், குமாரசுப்பிரமணியம் (சவுதி அரேபியா), சந்தசாமி [மல்லாவி மகாவித்தியாலயம்], பராசக்தி, தனலக்ஷ்மி [வவனிக்குளம் மகாவித்தியாலயம்] ஆகியோரின் அருமை மாமனும், பவஹாரிணி, நாதஸ்வரூபிணி, வித்தியானந்தி, சியாமசுந்தரன், தாரிணி, பாமினி, அபிராமி, சேயோன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 17-01-86 வெள்ளிக்கிழமை நடைபெறும். உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

'சத்திய வாசா' தகவல்: சே. இரவீந்திரநாதன்
இமையாணன், உடுப்பிட்டி. [C/A/240]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.